மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Culturalization of Flora and Fauna in Paalai Songs of Ainkunuru, and Spring Songs of Manyoshu

N. Kanagarasu

Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, India

Manuscript ID :
MT431A0153

Volume : **3**

Issue : **4**

Month : **December**

Year : **2023**

Received: 04.10.2023
Revised: 23.10.2023
Accepted: 03.11.2023
Published: 28.11.2023

Pages : 14-25

DOI:
10.5281/zenodo.10210278

ABSTRACT:

Akam Tradition of Sangam Poems and Love Poems of Manyoshu in Japanese Classical both this poems are harmony with expressing emotional of love background of nature. This article compares the trend of humanizing the song of birds, the blooming and falling of flowers, and the loving behavior of creatures in poetry, through Paalai Songs of Ainkunuru, and spring songs of Manyoshu, and highlights the common trends and peculiarities between them.

KEYWORDS:

Ainkunuru, Paalai Songs, Manyoshu Volume 10, Spring Songs, Flora and Fauna, Culturalization

தொகுதி-3 பதிப்பு-4 டிசம்பர் 2023 | E-ISSN: 2583-0449

ஐங்குறுநூறு, மன்யோசு வேனிற் பாடல்களில் கருப்பொருள் பண்பாட்டுவயமாக்கல்

நி. கனகராசு

முனைவர்பட்ட ஆய்வாளர்,

தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சங்க அகப்பாடல் மரபும் ஜப்பானிய செவ்விலக்கியமான மன்யோசு பத்தாவது தொகுதியின் காதற்பாடல்களும் காதலுணர்வை இயற்கையின் பின்னணியிலிருந்து வெளிப்படுத்துகின்றன. பறவைகளின் குரல், பூக்கள் மலர்தல், உதிர்தல், உயிரினங்களின் அன்புநடவடிக்கைகள் கவிதையாக்கத்தில் மனிதவயப்படுத்தப்படும் போக்கை, ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் மற்றும் மன்யோசு வேனிற்பருவப் பாடல்களின் மூலம் ஒப்பிட்டு, இவற்றிற்கிடையிலான பொதுப்போக்குகளையும் தனித்தன்மைகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

கருச்சொற்கள்

ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள், மன்யோசு தொகுதி பத்து, வேனிற்பருவப் பாடல்கள், குறியாக்கம், கருப்பொருள், மனிதவயப்படுத்தல், பண்பாட்டுவயமாக்கல்

முன்னுரை

சங்க அகப்பாடல் மரபும், மன்யோசு[1] பருவகாலப் பாடல்களும் மனித உணர்வுகளை இயற்கைத் தொகுதிகளினூடாகப் பாடுவதில் ஒத்திசைவாகவுள்ளன. இது குறித்த ஆய்வுகள் தமிழ்ச்சூழலில் நிகழ்ந்துள்ளன. மனோன்மணி சண்முகதாஸின் "பண்டைய தமிழர் யப்பானியர் அகப்பாடல்களில் மலர்கள் (ஓர் நுண்ணாய்வு)", செல்வஅம்பிகை நந்தகுமரனின், "சங்க அகப்பாடல்களிலும் மன்யோசு காதற்பாடல்களிலும் பறவைகள்: ஓர் ஒப்பீட்டாய்வு", "சங்க அகப்பாடல்களிலும் மன்யோசு காதற்பாடல்களிலும் இயற்கை: ஓர் ஒப்பாய்வு" ஆகிய ஆய்வுகள் கருப்பொருள்களின் பின்னணிகள் குறித்து ஆராய்ந்துள்ளன. ஹரூவோ ஷிரெனெ (Haruo Shirane)-வின், "Japan and culture of the Four seasons" என்ற நூல், பருவகால கருப்பொருட்கள் பண்டைய யப்பானிய இலக்கியங்கள், கலைப்பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதன் தன்மை குறித்து ஆய்கின்றது. கருப்பொருள்கள் பண்பாட்டுக் கூறுகளுடன்

இணையும்முறை குறித்தும் இவ்வாய்வுகள் முன்வைக்கின்றன. இவற்றின் தொடர்ச்சியாக இந்தக் கட்டுரை, இரு இலக்கியங்களிலும் கருப்பொருள்களின் பண்பாட்டுவயமாக்கல் கவிதையாக்கமுறையில் அமைந்துள்ள முறைகளை ஒப்பிட்டு ஆய்கிறது.

கவிதையாக்கத்தில் கருப்பொருளின் இடம்

தொல்காப்பியம் முதல், கரு, உரி எனக் கவிதையாக்கத்திற்கு இன்றியமையாத மூன்று பொருட்களைக் குறிப்பிடுகின்றது. இவற்றுள் உரிப்பொருளே செய்யுளுக்குரிய பொருளாகின்றது. முதல்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளை விளக்கும் கருவிகளாக, 'துணைநிலைக் குறியன்' களாக (யரோஸ்லவ் வாச்செக். 2017:4) வருகின்றன. இவை இடம்பெறாத பாடல்களும் சங்க இலக்கியத்தில் இருக்கின்றன. உரிப்பொருளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் எடுத்துரைக்கும் தன்மையில் கருப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருப்பொருள்களுள் மக்கட் தொகுதி, உயிரினத் தொகுதி, கலை, சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகியன அடங்கும். “பாடப்படும் நிலத்திற்குரிய வாழ்வியல் பண்பாட்டின் அம்சங்களின் ஊடாகப் பாடுதலே முதன்மையாகின்றது.” (சிவத்தம்பி கா. 2009:17) பருண்மை நிலையான கருப்பொருள், அதன் நடவடிக்கை மனித நுண்ணுணர்வை வெளிப்படுத்தும் பணியைச் செய்கின்றது. கருப்பொருள் - உரிப்பொருள் உறவு என்பது, “'குறிக்கும்', 'குறிக்கப்படும் பொருளுக்கும்' இடையிலானது என்று கூறமுடியும்.” (யரோஸ்லவ் வாச்செக்.2017:7) மேலும், உரிப்பொருளுக்கும் முதற்பொருளுக்குமான இணைப்பையும் கருப்பொருள் செய்கின்றது.

உள்ளுறை, இறைச்சி போன்ற குறிப்புப்பொருள் வடிவங்களையுடைய பாடல்களில் கருப்பொருள்களின் இயங்கியல் முதன்மைபெறுகின்றது. உயிரினத்தொகுதிகளினூடே உணர்வுத்தளம் வெளிப்படுகின்றது. இப்படியான பாடல்களை வாசிக்கும்போது கருப்பொருட் பகுதி, உரிப்பொருட் பகுதி எனப் பகுத்து இரண்டிற்குமான உறவுநிலைகளை அவதானிக்க முடியும்.

சங்க மரபில் உள்ள உள்ளுறை, இறைச்சி போன்றே மன்யோசு பருவப் பாடல்களிலும் மகுரகொதப (தலையணைச் சொற்றொடர்), ககிகொதப (மையச்சொல்) என்ற குறிப்புப்பொருள் வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சங்க அகப்பாடல்களிலும் மன்யோசுப் பருவப் பாடல்களிலுமுள்ள கருப்பொருள்களின் இயங்கியல் ஒத்தசைவாக உள்ளன. இவ்விரு பாடல் தொகுதிகளிலுமுள்ள கருப்பொருள்களை இரு நிலைகளில் பொருள்படுத்திப் பார்க்கலாம். 1.பண்பாட்டுவயமாதல் (புறநிலை), 2.பண்பாட்டுவயமாதல் (பொருள்கோள் நிலை) என்பன.

கருப்பொருள் பண்பாட்டுவயமாக்கல்

குறிச்செயல்பாடுகளால் அமைந்த மொழி உலகம், யாவற்றிற்கும் பெயரிடுதல் மற்றும் மதிப்பீடு அளித்தல் வாயிலாக அவற்றை மனிதவயப்படுத்துகின்றது. மொழிக்குள் தான் காண்கின்ற உலகை அடைத்துவிடுதல், எளிதாக அதன்மீது அதிகாரம் செய்ய வழி ஏற்பட்டுவிடுகின்றது. அவ்வகையில் கருப்பொருள்களைக் கலை இலக்கியச் செயல்பாடுகளுக்குள் கொண்டுவருவதன் மூலம் மனிதவயப்படுத்தப்படுகின்றது. மனித உணர்வுகளைக் கருப்பொருள்களோடு குறிப்பாக இயற்கையோடு தொடர்புபடுத்திப் பாடுவது, உவமிப்பது, உள்ளுறை, இறைச்சி போன்ற எடுத்துரைப்பு வடிவங்களினூடாகச் சொல்வது, பழந்தமிழ்ச் செய்யுள் மரபாகியிருக்கின்றது. மன்யோசுப் பாடல்களிலும் இப்போக்கு காணப்படுகின்றது. இவ்விரு மரபிலும் கருப்பொருள்களின் மீதான சமூக, சமய, பண்பாட்டு மதிப்புகள் குறிப்புநிலையில் பயன்படுத்துவது இலக்கிய அலகாகக் கருதப்பட்டுள்ளன. பரத்தையோடு மகிழும் தலைவனை எருமை, நீர்நாய், வண்டு என்றலும், தலைமகளைத் தாமரை, மான் என்றலும், பரத்தையைப் புலால் நாற்றம் வீசும் குளம், பூத்த கரும்பு என்றலும், சகுர மலரைக் காணுதலைப் புத்துயிர்ப்பின் குறியீடாகவும், உகுவிசுவின் குரல் தலைவனின் வருகையும் புத்துயிர்ப்பின் குறியீடாகவும் வருதல் பண்பாட்டுவயமாக்கலின் பகுதிகளாகும். க.பஞ்சாங்கம், "நிலத்தையும் அதன் கருப்பொருட்களையும் மனித உணர்ச்சிகளோடு இணைத்துப் பின்னிவிடும்போது இயற்கைப் பொருட்கள் ஒவ்வொன்றும் மனிதர்களுக்கானதாக மாறிவிடுகின்றது." (2014:168) என்கிறார். மனிதவயப்படுத்தல் என்பது மனிதர்கள் அவற்றிற்கு அளிக்கும் மதிப்பு சார்ந்து பண்பாட்டுத்தன்மையை அடைகின்றது. "அகப்பாடல்களில் கருப்பொருட்களை வைத்துப் பின்னப்படும் உள்ளுறை, இறைச்சி ஆகிய உத்திகளின் மூலம் இந்த நிலமும் அதன் பொருட்களும் அறிவு மண்டலத்தையும் தாண்டி, உணர்வு மண்டலத்திற்குள் செலுத்தப்படுகின்றன" (மேலது.167).

பண்பாட்டுவயமாக்கப்படும் கருப்பொருள்கள் குறிப்புப்பொருள் வடிவங்களில்/ அடுக்குநிலை/ புதைநிலை கொண்ட பாடல்களில் அமைகின்றன. குறியியல் நோக்கில் சங்க அகப்பாடல்களை ஆய்வுசெய்த யரோஸ்லவ் வாச்செக், குறிப்புப்பொருளின் அடுக்குநிலைகள் குறித்து விவாதித்திருக்கும் பகுதி இங்கு முதன்மை பெறுகின்றது. அவர், "இரண்டாம் நிலைக் குறிப்பொருள் இப்படி ஆக்கப்பட வேண்டும் என்று கருதி அல்லது எந்தக் கருதலும் இல்லாமல் நிகழலாம். பண்பாடுதான் இதைத் தீர்மானிக்கிறது எனக் கூறமுடியும். தமிழ் இலக்கியமே ஒருதனியுலகம் ஆகையால், அதற்கான இலக்கிய மரபைப் பின்பற்றிக் குறியாக்கம் அமைகிறது எனலாம். வேறுவகையில் சொல்வதானால், இவ்விலக்கிய உலகத்தில் நிலையாக்கம் செய்யப்பட்ட, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாம் பொருள் தன்மை உள்ளது. பாரம்பரிய

இலக்கிய மரபு அல்லது கவிதையின் வெளிப்பாடு முதல் நிலைக் குறிப்பொருளைவிட (இயற்கை வருணனை) இரண்டாம் நிலைக் குறிப்பொருளிலேயே உட்பொருள் (காட்சியின் உருவகப்பொருள்) அதிகம் புலப்படுத்தப்படுகிறது." (2017:74-75) என்கிறார்.

இவ்வாறு கருப்பொருள் நடவடிக்கைகள் பண்பாட்டுப் பின்புலத்தில் இருந்து பொருள்கொள்ளப்படுகின்றன. பொருள்கொள்ளுவது அந்தப் பண்பாட்டை அறிந்தவர்களுக்கே எளிதாகும். அவ்வாறு இல்லாதபோது, அவை இயற்கை - உயிரின நடவடிக்கைகளைக் கூறும் பாடல்களாகக் கருதப்படும். சங்க அகப்பாடல்களின் பொதுப்போக்கு, இயற்கை - உயிரினத்தொகுதிகளின் நடவடிக்கைகள் மனித உணர்வுத்தளத்திற்குப் பதிலீடு செய்பவையாக இருப்பதால் இவ்வாறு பார்க்கவேண்டியிருக்கிறது. இத்தகைய பார்வை நிலையிலிருந்து பல்வேறு உரையாசிரியர்கள் வெவ்வேறு பொருள்படுத்தல்களைச் செய்துள்ளனர்.

இவ்வாறான பொருள்படுத்தல் பண்பாட்டுவயமாக்கல் எனும் நிலையிலிருந்து கட்டமைக்கப்பட்டவை. அந்தவகையில் கருப்பொருள்கள் பண்பாட்டுவயமாக்கல் எனும் பார்வை முக்கியத்துவமுடையதாகிறது.

1. பண்பாட்டுவயமாதல் - புறநிலை

ஏற்கனவே சொல்லபட்டுள்ள / வழக்கிலுள்ள பண்பாட்டுவயமாக்கப்பட்ட கருப்பொருள்களை இலக்கிய ஆக்கங்களில் பயன்படுத்துவது. நம்பிக்கை, மரபு, சடங்கு போன்றன இவற்றுள் அடங்கும். இவையும் உள்ளுறை, இறைச்சியில் இடம்பெறும். மலர்கள், பறவைகள், மரங்கள், விலங்குகள் ஆகியவற்றின் மீதான பண்பாட்டு மதிப்பு புறநிலையில் பாடல்களில் மனித உணர்வோடு இணைத்துப் பொருள் கொள்ளப்பட்டுள்ளதைக் காணலாம்.

காக்கை - நற்றாய் வேண்டல் - மீள்வரவு/மகிழ்வு

ஐங்குறுநூற்றில் 391 ஆம் பாடல்,

> **"மறுவி றூவிச் சிறுகருங் காக்கை/ யன்புடை மரபினின் கிளையோ டாரப்**
> **பச்சூன் செய்த பைந்நிண வல்சி/ பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ**
> **வெஞ்சின விறல்வேற் காளையொ/ டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"**

ஆண்வயப்பட்ட சமூகச் சூழலிலிருக்கும் நற்றாய், காக்கையிடம் நன்னிமித்தம் வேண்டி நிற்பதாக அமைந்திருக்கின்றது. தலைவனோடு தலைமகள் உடன்போக்கு சென்றுவிட, அவர்கள் வீடு திரும்பும் வேளையில் மணமுடித்து வைக்க எண்ணும் நற்றாய், காக்கையிடம் பசிய கறிகலந்த உணவை பொற்கலத்திலிட்டுப் படைப்பதாகவும்,

அதற்குக் கடனாய் அவர்கள் இல்லம் திரும்பக் கரையவாயென வேண்டுவதாகவும் இப்பாடலின் சூழல் அமைகின்றது.

தமிழ்ப் பண்பாட்டில் காகம் கரைந்தால், புதியவர், வேண்டியவர்கள் வருவார்களென்ற நம்பிக்கை உள்ளது. அதன் வெளிப்பாடு அல்லது காக்கை முன்னோர் குலக்குறியாக இருக்கவும் வாய்ப்புகளுண்டு. ஆகவே காகத்தை நற்றாய் கரையச் சொல்வதாய் பாடலில் வருவதாகக் கொள்ள முடியும். காகத்தின் பண்பு உணவுகிடைத்தால் தன்சுற்றத்தை அழைத்துக் கூடி உண்ணும். (காக்கைக் கரவா கரைந்துண்ணும் - குறள்.527) அப்பண்பு இறைச்சிப் பொருளாக இப்பாடலில் வந்துள்ளது. அன்புடன் காகம் அழைத்து உண்டு மகிழ்ந்திருப்பதுபோலத் தானும் தலைமகன், தலைமகளுக்கு மணமுடித்து வைத்து அன்புகொண்டு வாழவேண்டும் என்ற குறிப்புப்பொருள் பொதிந்திருக்கின்றது. எனவே, 'அன்புடை மரபினின் கிளையோ டார' என வருவதைக் கொண்டு, பெருமழைப்புலவர் இறைச்சி உடைய பாடலென வாசித்துள்ளார்.

காக்கைக் கரையுமாறு நற்றாயின் வேண்டலானது, தலைவன் - தலைவி மீள்வரவு, மகிழ்வு, மணமுடித்து வைத்தல் ஆகியவற்றின் குறியீடாகிறது. அதற்குப் பண்பாட்டுவயமான காக்கை கருப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. காகம் குறித்த பண்பாட்டுப் பார்வை இல்லாதவர்க்கு இப்பாடல் ஆளுருவாக்கம்/ ஒருபாற் கிளவி போலத் தோன்றலாம்.

சகுர - ஹனாமி - புத்துணர்ச்சி, உற்பத்தி

பண்பாட்டுவயமாக்கப்பட்ட கருப்பொருள்களை மன்யோசுப் பாடல்களிலும் காணமுடிகின்றது. குறுகிய காலத்தில் நிலைத்திருக்கும் மலர்ந்த சகுர (sakura)-வைக் காதலர்கள் இணைந்து காணச் செல்வது யப்பானியப் பண்பாட்டில் பண்டைய காலத்திலிருந்து இன்றுவரையுள்ள நடைமுறை. அதனை ஹனாமி (Hanami) என்கின்றனர். (ஹனா - மலர், மி - காணுதல் - மலர்க்காட்சி, மலர்ப்பார்வை). சகி மலையில் மலர்ந்த மலரைக் காணத் தலைமகன் இன்னும் வரவில்லை என்ற ஏக்கத்துடன் தலைமகள் தன்னுணர்வை வெளிப்படுத்துவதாய் பாடற்பொருண்மை அமைகின்றது. இந்த நடைமுறை மன்யோசு காலத்திற்கு முன்பிருந்தே உள்ளதைப் பாடல்கள் காட்டுகின்றன. வேனிற் பருவத்தில் உமெ, யம புகி (yama fuki - yellow rose) ஆகியன மலர்ந்தாலும் சகுரமலர், பண்பாட்டு அடிப்படையில் முதன்மை பெறுகின்றது. இம்மலர்கள் மார்ச் மாத இறுதியிலிருந்து மே மாத தொடக்கம்வரை பூக்கின்றன. சகுர மலர்க்கு வாழ்வியல் நம்பிக்கை சார்ந்தும் சமயம் சார்ந்தும் அதற்கான மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கின்றது. நட்பு, மறுபிறப்பு, இளமை, அழகு, புத்துணர்ச்சி, மென்மை, நிலையற்ற அழகு, உன்னதம், வாழ்க்கையின் முடிவு ஒளிர்தல், கூட்டுறவு

ஆகியவற்றின் அடையாளமாகச் சகுரமலர் பார்க்கப்படுகின்றது. இந்த அடையாளங்கள் அம்மலரின் பண்பையொட்டி அமைகின்றன. நாட்டிற்கான அடையாள மலராகவும் கொள்ளப்படுகின்றது. பனிக்கால அறுவடைக்குப் பின்னர் வசந்த கால நெல் நடவுக்கான அறிகுறியாக இம்மலரின் வருகை அமைகிறது.

ஜப்பானியர்களின் ஆன்மா என்றும், இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் இம்மலர் மலர்வதால் இளஞ்சிவப்பு நிறம் மூதாதையர்களின் ஆன்மாவைக் குறிப்பதாகவும் நம்பப்படுகின்றது. இதற்கு அரிசி ஒயின் கலந்த படையலைப் படைத்து வணங்குகின்றனர். சகுர மலர்கள் சிண்தோ சமயத்தின் அடையாளமாகத் திகழ்கின்றன. இம்மலர் குறித்தத் தொன்மக்கதைகளும் வழங்கப்படுகின்றன. “ஆண்டுதோறும் இளவேனிற் பருவத்தில் வானிலிருக்கும் தேவதைகள், உறங்கும் சகுரவின் மெல்லிதழ்களைத் தன் மூச்சுக்காற்றுடன் இணைத்து உயிர்ப்பிப்பதாக வரும் புராணக் கதையும் உள்ளது.”[2]

‘பூக்களைப் பொறுத்தவரை சகுர, ஆண்களைப் பொறுத்தவரை சாமுராய்’ என்ற வழக்காறு காணப்படுகின்றது. இது சகுர மக்களிடம் கொண்டிருந்த செல்வாக்கை அறிவிக்கின்றது. இளவேனிலின் தொடக்கமாக உமெ மலர் பூத்தாலும் சகுர முதன்மைபெறுவது கவனிக்கத்தக்கது. குளிர்காலத் துயரிலிருந்து சகுரமலரின் வருகை புத்தொளியை ஆண்டுமுழுதும் தரும் என்று நம்பினர். “வேனிலின் வருகை வாழ்க்கையின் புத்துயிர்ப்பைக் கொடுக்கும் என்ற கருத்து உலகமக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது” என பொ.வே.சோமசுந்தரனார் (2009:539) குறிப்பிடுகிறார்.

சகுர மலர்ப் பண்பாடு காதற்பாடல்களில் வெளிப்படும் தன்மைக்குச் சான்றாக,

> **“கசுகவின் / மிகச மலையின்மேல்**
> **நிலவும் வந்திடுங்கொல்! / சகி மலையில்**
> **அலர்ந்த சகுரவின் / மலரைக் காண வேண்டும்”** (**மன்யோசு.**10.1887)

வேனிற் பருவத்தில் வருவதாகச் சொல்லிச் சென்ற தலைமகன், சகுர மலர்கள் (வேனிலின் வருகையாக) மலர்ந்தும் இன்னும் வராத சூழலில் அவன் வரவையும், அவனோடு சென்று சகுரவைக் காணவும் தலைவி காத்திருப்பதாய் அமையும் பாடல். தலைவனுக்கு நிலவை உள்ளுறையாகக் கொண்டு படிக்கலாம். யப்பானியப் பண்பாட்டில் சகுர மலர் வேனில் வருகையை மட்டும் குறிப்பதோடு, பண்பாட்டு நிலையில் உணர்வுத்தளத்தோடு முதன்மை பெறுகின்றது. அதாவது புத்துயிர்ப்பு, தலைவனின் மீள்வரவின் மகிழ்வு, கொண்டாட்டம் என்பனவற்றின் குறியீடாகின்றது.

2. பண்பாட்டுவயமாதல் (பொருள்கோள் நிலை)

இலக்கிய மரபில் கருப்பொருள்களை மனித உணர்வுகளை ஏற்றுவதற்கான உடல்களாக்குவதும், அவற்றை ஒரு புனைந்துரை வழக்காக, அழகியலாக மாற்றுவதும் பண்பாட்டுவயச் செயல்பாடுகளாகக் கொள்ளப்பெறும். பொருள்கோள் நிலையில் வாய்ப்புள்ள கருப்பொருள்கள் மீது புதிய வாசிப்புப் பொருள்தளங்களை/ முறையியலை உருவாக்குவதும் இதன் பகுதிகளாகும். உள்ளுறை, இறைச்சி, படிமம் போன்ற எடுத்துரைப்புச் செயல்பாடுகளில் பொருள்கோள் நிலையில் உரையாசிரியர்கள் புதியபுதிய விளக்கங்களைச் சமூக, சமய, பண்பாட்டு மதிப்புகளோடு இணைத்துத் தருகின்றனர். கருப்பொருள்களை இத்தகைய வடிவங்களில் பண்பாட்டுவயப்படுத்தும்போது இன்னும் மனித உணர்வுகளோடு நெருக்கமுடையதாகி, புதிய எடுத்துரைப்பு அழகியல் உருவாகின்றது. இவையே சமூகத்தில் புதிய வழக்குகளையும் (உவமைகள், உருவகங்கள் இவைபோல) உண்டுசெய்கின்றது. உள்ளுறை, இறைச்சி, மகுரகொதப போன்ற குறிப்புப்பொருள் வடிவங்களில் பறவைகள், மலர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகிய உயிரினத் தொகுதிகளின் பண்புநலன்கள், வாழ்க்கை நடவடிக்கைகள் மனித உணர்வுகளோடு இணைக்கப்பட்டு அவை குறியீடுகளாகச் செயல்வடிவம் பெறுகின்றன.

எடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து ஐங்குறுநூற்றில் மலர்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் ஆகியன உள்ளுறை, இறைச்சி வடிவங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் மன்யோசு பாடல்களில் மலர்களும் பறவைகளும் இடம்பெறுவதையும் காணமுடிகின்றது.

மனித உணர்வுகளை வெளிப்படுத்துவதில் மலர்கள், பறவைகள், விலங்குகள், மரங்களின் பண்புகள், அவற்றின் நடவடிக்கைகள் குறியீடாக அமைகின்றன.

மலர்கள்

நிலமணியும் அதிரல் - தலைவி காத்திருப்பு

இளவேனிற் பருவத்தில் வருவதாகச் சொல்லிச்சென்ற தலைமகன், பருவம் வந்தும் வராமையால் ஆற்றியிருக்கும் தலைமகள், அதிரல் மலர் நிலமணிய மலர்ந்திருப்பதைக் (இயற்கை நடவடிக்கையை) கண்டு வருந்துவதாய் அமைந்த பாடல்,

“புதுப்பூ வதிர றாஅய்க் / கதுப்பற லணியுங் காமர் பொழுதே”

(ஐங். 345.2-3)

அதிரல் மலர் நிலமணிந்திருப்பதாக வரும் காட்சிப்படுத்தல் இறைச்சியாகப் படிக்க வாய்ப்புள்ளது. காமர் பொழுதென்பதோடு அதிரல் நிலமணிதல் அன்பு நடவடிக்கையாகப்

பொருள் கொள்ள பெறுகின்றது. தலைவனோடு தானும் அன்போடு இளவேனிலில் இணைந்து வாழ எண்ணும் தலைவியின் ஆற்றாமையும் காத்திருப்பும் அதிரல் மலரால் குறிப்படுத்தப்பட்டுள்ளது.

உமெ சிதறல் - காதலி நலிவு

> **"எப்போதுகொல்லோ / இவ்விராவும் விடியும்**
> **உகுவிசுவின் / கிளைத் தாவலில் உதிர்**
> **உமெ மலர் காண்போம்"** **(மன்யோசு.10.1873)**

இளவேனிற் பருவத்தின் வருகையாய் உகுவிசு பறவையின் குரலும், உமெ மலர்தலும் யப்பானியப் பண்பாட்டில் பார்க்கப்படுகின்றது. வேனிற் பருவத்தில் வருவதாகக் காதலியிடம் உறுதிமொழி தந்துவிட்டுச் சென்ற சூழலில், குறித்தப் பருவத்தில் செல்ல முடியாத நெருக்கடியில் தலைமகன் வருந்துவதாய் இப்பாடல் அமைகின்றது. உமெ மலர் தலைமகளின் நலிவுக்குக் குறியீடாகிறது. பனிக்காலத்தின் இறுதியில் மலரத்தொடங்கும் உமெ மலர் இளவேனிற் பருவத்தின் இடையில் உதிர்ந்துவிடும். இளவேனிலில் வருவானெனக் காத்திருக்கும் காதலியின் நலிவும் பருவச் சூழலில் உமெ மலர் உதிர்தலும் ஒப்புமையாக்கப்பட்டுப் பண்பாட்டுவயப்படுத்தப்பட்டுள்ளன.

பறவைகள்

பெண் பருந்து விளித்தல் - தலைமகளின் அழுகை

"உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை / யலறுதலை யோமை யங்கவட் டேறிப் புலம்புகொள விளிக்கு நிலங்காய் கானத்து" (ஐங். 321.1-3)

தலைமகளைப் பிரிந்து பொருளீட்ட காய்ந்த நிலத்தினூடாகச் செல்லும் தலைமகன், பெண் பருந்தொன்று ஓமை மரத்தின் கிளையிலிருந்து தன் இணையைக் கூவியழைக்கின்றதைக் காண்பதாய் பாடற் பொருண்மை அமைகின்றது. பெண் பருந்தின் நடவடிக்கை தலைவியின் உணர்வு நிலைக்குக் குறியீடாகிறது. ஆற்றாமையோடு இருக்கும் தலைமகள் பெண் பருந்தைப் போன்றே தன்னையெண்ணி அழுவாள் என்ற இறைச்சிப்பொருள் தோன்ற அமையும் இப்பாடலில் பருந்தின் நடவடிக்கை பண்பாட்டுவயப்படுகிறது.

உகுவிசுவின் குரல் - இளவேனில் வருகை - காதலியின் புத்துயிர்ப்பும் காத்திருப்பும்

உகுவிசுவின் குரல் இளவேனிற் பருவ வருகையின் குறியீடாகிறது. குறித்தப் பருவத்தில் தலைமகன் வந்திடுவான் எனக் காத்திருக்கும் காதலியின் கூற்றாக,

"தளிர்கள் தாழும் / வேனில் அலர்ந்ததுவே
என் வாயிலிலே / யநகியின் கிளையில்
உகுவிசு நரலும்" **(மன்யோசு.10.1819)**

என்ற பாடல் அமைந்துள்ளது. தன் இணையை அழைக்கும் உகுவிசுவின் குரல், தலைமகன் தன்னைத் என் இல்லத்தில் வாயிலில் நின்று அழைப்பான் என்ற காதலியின் எதிர்பார்ப்பிற்கும் புத்துயிர்ப்பிற்கும் குறியீடாக அமைகின்றது. இக்கருத்தாக்கத்திற்கு உகுவிசு பறவை மனிதவயப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக இவ்விரு மரபிலும் பருவ வருகை, மலர்களின் நிலைகள், உயிரினங்களின் இயல்பு நடவடிக்கைகள், மனித உணர்வுத்தள அமைப்போடு இணைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

எடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து ஐங்குறுநூற்றில் மரங்களும், விலங்குகளும் பண்பாட்டுவயப்படுவதுபோல, மன்யோசு வேனிற்பாடல்களில் காணப்படவில்லை. இது சங்க அகப்பாடலின் தனிச்சிறப்பெனலாம்.

மரங்கள்

பழுத்த ஆலம் - தலைவி, பறவை - தலைவன்

வேனிற் பருவத்தில் பொருளீட்டுவதற்காகச் செல்லும் தலைமகனோடு, தலைமகளும் உடன்வருவதாகச் சொல்ல, அவளிடம் நிலத்தின் தன்மை கூறி, உடன் செலவை மறுக்கும் தலைமகனுக்குத் தோழிச் சொல்வதாகப் பாடல் அமைந்துள்ளது. "புதுக்கலத் தன்ன கனிய வாலம் / போகிறனைத் தடுக்கும் வேனில ருஞ்சுரம்" (ஐங். 303.1-2) பழுத்த ஆலம் தலைவிக்கும், பறவை தலைமகனுக்கும் குறியீடாக்கப்பட்டுள்ளது. உரையாசிரியர்களால் உள்ளுறைப்பாடலாகப் படிக்கப்பட்டுள்ளது. பொருளீட்டச் செல்லும் தலைமகனுக்கு இரைதேடும் பறவையும், ஆற்றாமை, பிரிவு முற்றினால் தாங்கும் பண்பற்ற தலைமகளுக்குக் கனிந்த ஆலமரமும் ஒப்புமையாக்கம் செய்யப்பட்டுள்ளன. தலைவன் உடன் அழைத்துச் செல்லாத வேளையில் பழுத்த ஆலமரம் பறவைகளைத் தன்பால் ஈர்ப்பதைப் போல தலைமகனைத் தலைமகள் தன்பால் ஈர்ப்பாளென்ற குறிப்புப்பொருள் செறிந்துள்ளது.

விலங்குகள்

செந்நாய் - தலைமகன், குருளைப் பன்றி - சுற்றத்தார்

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை / குருளைப் பன்றி கொள்ளாது கழியும்" (ஐங்.397.1-2) உடன்போக்கு சென்ற தலைமகள், தலைமகனோடு தன் இல்லத்திற்குச்

செல்கின்ற வழியில் சுற்றத்தார் அவர்களைப் பின்தொடர்ந்து வரும்சூழலில் தன்னூராரிடம் சொல்வதாய் பாடல் அமைந்துள்ளது. செந்நாய் குட்டிகளையுடைய தாய்ப்பன்றியைக் கொல்லாது செல்லும் அன்பு நடவடிக்கை, தலைமகன் தங்களைப் பின்தொடர்ந்து வரும் தலைமகளின் சுற்றத்தாரைத் தாக்காது செல்லும் பண்பிற்குக் குறியீடாக்கப்பட்டுள்ளது. செந்நாய் தலைமகனுக்கும், குருளையையுடைய பன்றிச் சுற்றத்தார்க்குமான ஒப்புமை பண்பாட்டுவயமாதலின் பகுதியாகியுள்ளதை அறியமுடிகிறது.

இவ்வாறாக, உயிரினத்தொகுதிகளைப் பண்பாட்டுவயப்படுத்தும் போக்கு இவ்விரு இலக்கிய மரபுகளிலும் உள்ளதைச் சான்றுகள் காட்டுகின்றன. இவ்விரு மரபிலும் அந்தந்தப் பருவகால, நிலவியல் சூழலுக்குகந்த கருப்பொருட்கள் மனித உணர்வுத்தளங்களோடு இணைக்கப்பட்டுப் பண்பாட்டுவயமாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, பருவ நடவடிக்கைகளைத் தனக்குள் இணைத்துப் பார்க்கும் மனித ஆக்கமாக வெளிப்படுதல் இங்கு பொதுப்பண்பாகின்றது. மேலும், ஒப்பீட்டு நிலையில் ஐங்குறுநூற்றுப் பாடல்களைவிட மன்யோசுப் பாடல்களில் குறிப்புத்தளம் உடைய பாடல்கள் சற்றுகூடுதலாகக் காணமுடிகின்றது. உருவக நிலையிலான பாடல்களாக அமைகின்றன. முதல்நிலை வாசிப்பு இயற்கைக் கவிதை அல்லது பருவக்கவிதையாகப் படிக்கும் தன்மையிலும் இலக்கியச் சூழல், மரபு, சமூக, பண்பாட்டு நிலையிலிருந்து இரண்டாம் தளப்பார்வையைப் பெற்றுள்ளதை (மனிதவயப்படல்/பண்பாட்டுவயப்படல்) அறிய முடிகிறது.

முடிவுரை

எனவே, பருவத்தினூடாகக் கருப்பொருள் நடவடிக்கைகளைப் பண்பாட்டுவயப்படுத்தும் தன்மையில் / இலக்கிய ஆக்கமுறையில் இவ்விரு மரபுகளும் ஒத்திசைவாக உள்ளதை அறிய முடிகிறது. இம்முறையில் மற்ற பருவத்தொகுதிகளோடும் விரிவாக ஆய்ந்து பார்க்க இயலும். நார்த் ஆ்ஃப் ஃபிரையின் தொல்படிவ மாதிரிகளும் புதிய திறப்புகளைச் செய்யும்.

சான்றெண் விளக்கம்

1. ஜப்பானிய முதல் இலக்கியம் என்ற நிலையிலும் செவ்வியல் கால இலக்கியம் என்ற நிலையிலும் மன்யோசு கவனம் பெறுகின்றது. மன்யோசு - பத்தாயிரம் இலைகளின் தொகுதி எனப் பொருள்படும். பல்வேறு காலங்களில் வாய்மொழி மரபில் இருந்த பாடல்கள் கி.பி.759 இல் (நரகாலம்) தொகுக்கப்பட்டன. சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் பாடியுள்ளனர். 20 தொகுதிகள். 4516 பாடல்கள். உயிரொலிகளை அசையாகக் கொண்ட பா வடிவமே ஜப்பானியத்தின் தனித்துவம். தங்க என்ற (5-7-5-7-7) அசையமைப்புடைய பாவடிவத்தில் மிகுதியான பாடல்கள் பாடப்பட்டுள்ளன. தொகுதி 8, 10, 11 ஆகியன

காதற்பாடல்களாக உள்ளன. நான்கு பருவங்களின் (வேனில், கோடை, கார், பனி) பின்னணியிலிருந்து காதலைப் பாடுதல் இவற்றின் அடிப்படை அமைப்பாகும். இங்கு தரவாகப் பத்தாவது தொகுதியிலுள்ள வேனிற் பாடல்கள் (124 பாடல்கள்) தரவாகக் கொள்ளப்பட்டுள்ளன. வயற்பணிகள், தூது, தய்கா சீர்திருத்தம்/ புரட்சி போன்றவற்றிற்காகச் செல்லும் காதலனின் பிரிவும் காதலியின் இருத்தலும் குறித்த பாடல்களாக வேனிற் பாடல்கள் அமைகின்றன. பிரிவும் காத்திருத்தலும் மற்ற பருவங்களிலும் தொடர்வதால் இத்தொகுப்பே இப்பொதுப் பொருண்மையைக் கொண்டு அமைகின்றது.

2. காண்க. www.highparknaturecentre.com/2/cherry-blossom-history

துணைநூற்பட்டியல்

1. கோவை ஞானி, (பதிப்பாசிரியர்). *இன்று ஏன் தேவை சங்க இலக்கியம்.* சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம், 2014.
2. கார்த்திகேசு, சிவத்தம்பி. *சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்.* சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.
3. பொ.வே, சோமசுந்தரனார். *ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2009.
4. தி சு, நடராசன். *தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும்.* சென்னை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2016.
5. மனோன்மணி சண்முகதாஸ். *ஜப்பானியக் காதல் பாடல்கள்.* சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2000.
6. முத்துச்சாமி, க. *சங்கத் தமிழ்க் குறிப்புப் பொருள்.* தஞ்சாவூர், அன்னம், 2015.
7. யரோஸ்லவ் வாச்சக், (தமிழில் பூரணச்சந்திரன் க.). *சங்க இலக்கியத்தில் இயற்கைக் குறியீடு - ஐந்திணை மலர்களும் மரபுகளும்.* திருச்சி, அடையாளம், 2017.
8. யரோஸ்லவ் வாச்சக், (தமிழில் பூரணச்சந்திரன் க.). *தமிழ் மலர் 2010 - தமிழறிஞர்களின் ஆய்வுத் தொகுப்பு.* கோயம்புத்தூர், தமிழ்நேயம், 2010.

REFERENCES

1. Kovai Gnani, (Edition). *Indru Eyan Thevai Sanga Illakkiyam.* Chidambaram, Meiyappan Publications, 2014.
2. Karthikeyshu, Sivathamby. *Sanga Ilakkiyam Kavithaiyum Karutthum.* Chennai, International Institute of Tamil Studies, 2009.
3. P V, Somasundranaar. *Aingurunooru sources and texts.* Chennai, Saiva Siddhanta Works Publishing Society, 2009.
4. T S, Natarajan. *Tamil Aesthetic Tradition and Theory.* Chennai, New Century Book House (P) Ltd., 2016.

5. Manonmani Sanmugadas. *Japanese love songs*. Chennai, International Institute of Tamil Studies, 2000.
6. K, Muthusamy. *Sangath Thamizhk Kurippup Porul*. Thanjavur, Annam, 2015.
7. Yaroslav Vachak, (Tamil Author -Poornachandran.K). *Sanga Ilakkiyathil Eyarikai Kuriyeedu - Inthinai Malarkalum Marapukalum*. Trichy, Adaiyalam Publications, 2017.
8. Yaroslav Vachak, (Tamil Author -Poornachandran.K). *Thamizh Malar 2010 - Thamizaringnarkalin Aavuth Thoguppu*. Coimbatore, Thamizh Neyam, 2010.
9. Haruo Shirane. *Japan and the Culture of the Four Seasons - Nature, Literature, and the Arts*. New York, Columbia University Press, 2012.